# DEPOSITION OF WITNESS

## Chapter XXIII Code of Criminal Procedure

## IN THE COURT OF SESSIONS JUDGE

## TIRUVARUR

## Sessions Case No.12/2026

**Deposition of Witness for Prosecution PW 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலமுத்தையா | Father's Name | : | காந்தி |
| Village | : | திண்டுக்கல் | Taluk | : | திண்டுக்கல் |
| Calling | : | | Age | : | 38 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 01st day of April 2026.**

**(A1 to A6 are present).**

**சாட்சியை காணொலி மூலமாக விசாரணை செய்ய வேண்டுமென்று அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க MP No.25, Dated 30.03.2026 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் திண்டுக்கல் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற முதன்மை மாவட்ட நீதிபதிக்கு அனுப்பப்பட்ட இந்நீதிமன்ற கடித எண் 1967, நாள் 30.03.2026 ன்படி திரு பாலமுத்தையா அவர்கள் காணொலி மூலமாக விசாரிக்கப்படுகிறார்.**

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.01 14:32:42 +0530

திண்டுக்கல் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் திரு R.மதன்குமார் (Technical Man power E-Sewa) என்பவர் Remote Point Co-ordinator ஆக இருக்கிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்ட சிலை கடத்தல் தடுப்பு பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 27.01.2019 அன்று நீடாமங்கலம் காவல் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பிலிருந்தபோது நீடாமங்கலம் அரசு மருத்துவமனையிலிருந்து வந்த தகவலை பெற்று மேற்படி மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த 36 வயதுடைய பாண்டியன், த/பெ.வசந்தகுமார் என்பவரிடம் காலை 11.00 மணிக்கு வாக்குமூலம் பெற்று நிலையம் திரும்பி அறிக்கை செய்து கொண்டேன். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.7**. அதனடிப்படையில் நீடாமங்கலம் காவல் நிலைய கு.எண் 34/2019, இதச பிரிவுகள் 147, 148, 341, 294(பி), 323, 324, 506(2)ன்கீழ் நான் பதிவு செய்த முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.8**. முதல் தகவலறிக்கையுடன் வாதியின் புகார் வாக்குமூலத்தை இணைத்து கனம் நீடாமங்கலம் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.01 14:32:49 +0530

அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை நிலைய கோப்பிலும் வைத்தேன். அன்றைய தினமே பகல் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பிரபு, அறிவழகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.9**. 27.01.2019 அன்று சாட்சிகள் கரிகாலன், பிரபு, இளமாறன், ஞானசெல்வி, லோகநாதன் மகன் பிரபு, அறிவழகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். சம்பவ இடம் சென்று விசாரணை செய்த வகையிலும் என்னுடைய ரகசிய விசாரணையிலும் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கின் 1 முதல் 4 எதிரிகள் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் என தெரியவந்ததன் பேரிலும் எதிரிகளை தேடிவந்த நிலையில் 06.02.2019 அன்று 15.30 மணிக்கு நீடாமங்கலம் அண்ணா சிலை அருகில் நின்று கொண்டிருந்த இவ்வழக்கின் 4 ம் எதிரி கோவிந்தராஜை குற்ற காரணம் கூறி கைது செய்து 16.00 மணிக்கு நிலையம் கொண்டுவந்து திரேக சோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்படைத்தேன். 07.02.2019 அன்று புகார்தாரர் பாண்டியனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 1 முதல் 4 எதிரிகள் மட்டும் இவ்வழக்கு சம்பவத்தில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.01 14:32:55 +0530

ஈடுபட்டவர்கள் என என் புலன் விசாரணையிலும் சாட்சி 1ன் மறுவாக்குமூலத்திலும் தெரியவந்ததால் 09.05.2019 அன்று இவ்வழக்கின் சட்டப் பிரிவினை இதச பிரிவுகள் 147, 148, 341, 294(பி), 323, 324, 506(2)லிருந்து இதச பிரிவுகள் 341, 294(பி), 323, 324, 506(2) ஆக சட்டப் பிரிவு மாறுதல் செய்து அறிக்கை சமர்ப்பித்தேன். அந்த சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கையின் Xerox Copy **அ.சா.ஆ.10**. தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் டாக்டர் சதீஷ்குமார் காயம்பட்ட பாண்டியனுக்கு வழங்கிய Medico Legal Form on discharge ல் சொற்ப காயம் என கருத்துரை வழங்கியது **அ.சா.ஆ.11**. 09.05.2019 டாக்டர் ராகேஷ் சர்மாவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணை முடித்து 09.05.2019 அன்று எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 323, 324, 506(2)ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் ஒட்டுமொத்த புலன் விசாரணையும் என்னால் மேற்கொள்ளப்பட்டது என்றால் சரி. தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையளித்ததாக சொல்லப்படும் மருத்துவரை விசாரித்து நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரி. விபத்து பதிவேட்டை நான்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.01 14:33:01 +0530

பார்வையிட்டேன். அ.சா.ஆ.5 ல் பாண்டியன் என்பவர் மது போதையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் தெற்கு-வடக்காக உள்ள சாலை என்றால் சரி. அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் கிழக்கு-மேற்கு சாலையில் நடந்ததாக சொல்லவில்லை என்றால் சரி. அ.சா.1 எனது விசாரணையில் எதிரி அய்யப்பன் அவரது இடது தொடையில் அருவாளால் வெட்டியதாக சொல்லவில்லை என்றால் சரி. பாண்டியனுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் சொத்து சம்மந்தமான பிரச்சனை இருந்ததாக சொல்லியுள்ள சூழ்நிலையில் அது என்ன பிரச்சனை என்று விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரி. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தை சுற்றியுள்ள நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரி. எனது விசாரணையில் அ.சா.3 நீடாமங்கலம் மருத்துவமனையில் இந்த வழக்கு புகார் கொடுத்ததாக சொல்லியிருந்தால் தவறு. சொன்ன தேதி, நேரம், இடத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை எனவும் எதிரியை சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை எனவும் சொன்னால் தவறு. அ.சா.1 பின் யோசனையிட்டு கொடுத்த புகாரை சரிவர விசாரணை மேற்கொள்ளாமல் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. சம்பவ இடம்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.01 14:33:06 +0530

செல்லாமலும் சாட்சிகளை விசாரணை செய்யாமலும் வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் தவறு. இந்த வழக்கில் ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரி. இந்த வழக்கிற்கு ஆதரவாக வேறு எந்த தடயங்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரி. 4 ம் எதிரி தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்தவர் என்றால் சரி. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு எதிரிகள் மற்றும் அவர்களது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் காணொலி வாயிலாக படித்து காட்டப்பட்டு விளக்கி கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு மின் அஞ்சல் மூலம் சாட்சியம் அனுப்பி வைக்கப்பட்டு சாட்சியின் கையொப்பம் பெறப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.01 14:33:13 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.